**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 168/2019**

பெயர் : இராமலிங்கம் P.W.3.

த/பெ. : கோவிந்தசாமி

தேதி : 30.01.2025.

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

1. வாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். வாதி யாருக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஜானகி என்பவர் எதிராக தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் இடத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துகளின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை புல எண்களுக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துகளின் ஒவ்வொரு புல எண்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நாக்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாயார் பெயரில் உள்ளது. எனது தாயார் எந்த ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் தெரியாது.

2. அந்த கிரயப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை வாதி எவ்வாறு அனுபவித்து வருகிறார் என்றால் எனது தாயார் பெயரில் உள்ள சொத்துகளின் பட்டா வாதியின் பெயருக்கு மாறி வந்துள்ளதால் அவர் அனுபவித்து வருகிறார். தாவாசொத்தில் வாதி ஆஸ்பெட்டாஸ் சீட்டால் போடப்பட்ட ஷெட் அமைத்துள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தில் வாதி ஆஸ்பெட்டாஸ் சீட் போட்டு குடியிருந்து வருவதாக சொல்லவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா 2 இன சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா

2வது அயிட்ட சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்திருந்தால் வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காததால் அவர் மேல்முறையீடு செய்திருப்பார் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தின் அனுபவம், நான்கெல்லை, விஸ்தீரணம் ஆகியவை தெரியாது என்றாலு, வாதி எனது சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆதாய சாட்சி என்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.